# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

**No:** 24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** +94 11 2565304 – 6, 5552746, 5552749, **Fax:** +94 114714460
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org

## ஊவா மாகாண சபைத் தேர்தல்கள் 2014
## தேர்தல் தின செய்தி அறிக்கை இல.3

**செப்டெம்பர் 2014, கொழும்பு, இலங்கை:** தேர்தல் தினம் பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களிலும் பெருமளவிலான வாக்காளர்களைக் கண்டது. வாக்காளர் வரவு நண்பகல் அளவில் பதுளை மாவட்டத்தில் 50% ஆகவும் மொனராகலை மாவட்டத்தில் 44% ஆகவும் இருந்ததாக தேர்தல் அதிகாரிகள் கூறியதை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவித்தன. கடந்த, 2009 ஊவா மாகாணசபைத் தேர்தலில், பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 70.03% ஆனவை அளிக்கப்பட்டன. இந்த அறிக்கையை எழுதும் வேளையில், இன்றைய வாக்களிப்பில் வாக்காளர் வரவு பற்றிய இறுதி உத்தியோகபூர்வ உறுதிப்படுத்தும் தகவல் இல்லாத போதிலும், வாக்காளர் பங்குபற்றல் கடந்த தேர்தலைப் போன்ற அதே மட்டங்களிலேயே இருக்க முடியுமென்பதை, நண்பகல் செய்தி அறிக்கைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

தேர்தல் தினத்தன்று பொலிசாரினால் அறிவிக்கப்பட்ட சம்பவங்களைப் பின்வரும் அட்டவணை சுட்டிக் காட்டுகிறது.

| பொலிஸ் பிரிவு | 20, செப்டெம்பர் 2014, அன்று 0800-2200 இற்கிடையில் அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் | மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பதுளை | 1 | 0 |
| பண்டாரவளை[1] | 5 | 0 |
| மொனராகலை | 1 | 0 |
| Total | 7 | 0 |

[1] பண்டாரவளை தேர்தல் செயற்பாட்டு மையம், தேர்தல் தினமாகிய இன்று, தேர்தல் வன்முறைகள் தொடர்பாக இடம்பெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை மற்றும் நாளில் இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கைதுகள் சம்பந்தப்பட்ட தகவல்களை தே.வ.க.நி இற்று வழங்குவதற்கு மறுத்தது. தே.வ.க.நி பண்டாரவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட அனைத்துப் பொலிஸ் நிலையங்களையும் தொடர்பு கொண்டது, ஆயினும் பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பண்டாரவளைப் பொலிசை அதனால் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இன்றைய தினம், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டுதல்கள் உள்ளடங்கிய 6 கடுமையான சம்பவங்களைக் கொண்டிருந்தது. இவை சுடுகலன்கள் மற்றும் ஆபத்தான ஆயுதங்கள் என்பவற்றின் பாவனை என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. ஒரு சம்பவம் பண்டாரவளைப் பொலிஸ் நிலைய வளாகத்தினுள்ளேயே நிகழ்ந்துள்ளது. எவ்வாறாயினும், அறிக்கையை எழுதும் வரை கைதுகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப் படவில்லை.

தேர்தல் தினத்தன்று கொலை அல்லது ஆபத்தான காயங்கள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பான சம்பவங்கள் அறிவிக்கப்படவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். எவ்வாறாயினும், அரச வளங்களின் பரவலான துஷ்பிரயோகமும் மற்றும் தேர்தல் சட்டங்களின் மீறல்களும் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிகழும் வரை நடந்தேறியுள்ளன.

வாக்களிக்கும் உரிமையை அப்பியாசிப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இனங்காணுதல் ஆவணங்களின் சமர்ப்பித்தல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து தே.வ.க.நி கரிசனை கொள்கிறது. இதன் ஒரு விளைவாக, பதுளை மாவட்டத்தில் விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் மையங்களுக்கு உதவுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு, தே.வ.க.நி சாதகமான வகையில் பதிலிறுத்தது.

**தேர்தல் தினத்திலான சில முக்கிய நிகழ்வுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:**

- ஊவா மாகாணத்திற்கு வெளியே உள்ள பகுதிகளிலிருந்து, பல்வேறு அரசியல் கட்சிகளையும் சார்ந்த அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் அளவுக்கதிகமான பிரசன்னம், பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களில் வெளிப்படையாகக் காணப்பட்டது. தெரிவிக்கப்பட்ட பல பாரதூரமான சம்பவங்களில் ஊவா மாகாணத்திற்கு வெளியிலிருந்து வந்த ஐ.ம.சு.கூ அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் சம்பந்தப்படுதல்கள் கூடுதலாக இருந்தததாக குற்றம் சாட்டப்படுகிறது.
- தேர்தல் தினத்தன்று "பாரதூரமான சம்பவங்கள்" எனப்படுபவற்றில் பெரும்பாலனவை பதுளை மாவட்டத்திலிருந்தானவையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- வாக்காளர்களை வாக்களிப்பு நிலையத்திற்கு போக்குவரத்துச் செய்தல் உட்பட, தேர்தல் சட்டங்களின் மீறல்களில் பெரும்பாலானவை, மொனராகலை மாவட்டத்திலிருந்தானவையாக அறிவிக்கப்படுகின்றன.
- தே.வ.க.நி இற்கு முறையிடப்பட்ட அனைத்து உடல் ரீதியான தாக்குதல்களும், அரசியல்வாதிகள் மற்றும் கட்சித் தொண்டர்களுக்கு எதிரானவையாக அறிவிக்கப்படுகின்றது.
- வாக்காளர்களை செல்வாக்கு உட்படுத்துவதற்கு அல்லது வாக்களிப்பதிலிருந்து தடுப்பதற்காக மிரட்டுதல்கள் மற்றும் வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் என்பன உபயோகிக்கப்பட்டன.
- 13,000 பொலிஸார்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும், சட்டவிரோத பிரச்சார முறைகள் ( சின்னங்கள்/சுவரொட்டிகள் மற்றும் ஏனைய பிரச்சாரப் பொருட்களைத் தாங்கி வேட்பாளர்களின் பெயர் மற்றும்/அல்லது விருப்பிலக்கங்களைக் காட்சிப்படுத்தும் வாகனங்கள்) வாக்குப் பதிவு நிலையங்களுக்கு அருகில், அதே போன்று வேறு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதை, கிரமமாகக் காணக்கூடியதாகவிருந்தது.
- வாக்காளர் அட்டைகள் இல்லாத காரணத்தால் வாக்காளர்கள் தங்களது வாக்கினை அளிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.




**முறைமையியல்:** தே.வ.க.நி கொலை, கொலைக்கான முயற்சி, தாக்குதல், கடத்தல், தீ வைத்தல், கொள்ளை, கடுமையான காயம் ஏற்படுத்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டுதல் போன்ற சம்பவங்களை பாரதூரமான சம்பவங்களாக பதிவுசெய்கையில் சொத்துகளுக்கான சேதம், அச்சுறுத்தல்கள், தீங்கு மற்றும் தேர்தல் சட்டங்களின் மீறல்கள் என்பவற்றை ‘இலேசான தன்மை கொண்ட’ சம்பவங்களாகவும் பதிவு செய்கிறது

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் நிருவகிக்கப்படுகிறது.

**எங்களது தொடர்பு விபரங்கள்:**


தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி)
இல. 24/2, 28ஆவது ஒழுங்கை,
ஓஃப் பிளவர் வீதி,
கொழும்பு 7.
தொலைபேசி:: 0112565304-6 ரூ 0115552749
தொலைநகல்: 0114714460
மின்னஞ்சல்: cmev@cpalanka.org


கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்காக பின்வரும் நபர்களை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:


கலாநிதி.பாக்கியசோதி சரவணமுத்து
இணை அமைப்பாளர் - தே.வ.க.நி
0112301634 (நேரடி)

திரு. மஞ்சுளா கஜநாயக்க
ஒருங்கிணைப்பாளர்
0115552749/0772298565

திரு.மணிமாறன்
கள ஒருங்கிணைப்பாளர்
0115552749/0772476080